நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் (பொ),
செங்கல்பட்டு மண்டலம்,
124, G.S.T. ரோடு, செங்கல்பட்டு-1
ddcglregion@gmail.com

திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம்,
திருப்போரூர் வட்டம்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

**நக.எண். 2088/2015/செம3 நாள்.21.09.2015**

for Road.

அய்யா,

பொருள் :- மனைப்பிரிவு – நகர் ஊரமைப்பு மண்டல துணை இயக்குநர் அலுவலகம், செங்கல்பட்டு மண்டலம், செங்கல்பட்டு- காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம் (ம) ஊராட்சி ஒன்றியம், பொன்மார் ஊராட்சி, போலச்சேரி கிராமம், சர்வே எண்கள்.**55**/1B2, 2B, 2C1, 2C2; **57**/1, 2, 3, 4; **60**/2A, 2B; **61**/3pt-ல் ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு மவ/நஊஇஎண்.35/2012-ல் மனை எண்.417 பரப்பு **2.06 ஏக்கர்** இடத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் கோரியது - உத்தேச சாலையினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய கோருதல் - தொடர்பாக.

பார்வை :
1. ஊாட்சி மன்றத் தலைவர், பொன்மார் ஊராட்சி அவர்களின் கடிதம் நாள்.16.06.2015
2. மனுதாரர் திரு.R.S.நாராயணன் அவர்களின் கடிதம் மற்றும் இணைப்புகள் நாள்.14.07.2015
3. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் நக.எண். 10094/2015/எல்ஏ1, (ம) நக.எண்.10095/2015/எல்ஏ1, நாள்.10.08.2015
4. நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் நக.எண்.24282/2005/எல்ஏ2, நாள்.04.05.2006
5. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் நக.எண்.7978/2012/எல்ஏ2, நாள்.19.04.2012

*******

மேற்காண் பொருள் தொடர்பாக பார்வை 1 (ம) 2-ல் கண்ட கடிதங்களுடன் பெறப்பட்டவைகள் பரிசீலிக்கப்பட்டும், பார்வை 3-ல் கண்ட நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களின் உத்தரவிற்கிணங்க, மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்கும் பொருட்டு, உத்தேச மனைப்பிரிவு சம்பந்தமான சாலை அமைப்பு (Road Pattern)-னை குறிப்பிட்டுக் காட்டும் வரைபடம் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

மேற்காண் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள உத்தேச சாலை தமிழ்நாடு ஊராட்சி சட்ட விதிகளின்படி சரளை கற்களை (Metaling) கொண்டு உள்ளாட்சியின் நிர்வாக அலுவலர் / தலைவர் நிர்ணயிக்கும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் மனுதாரரால் அமைக்கப்படல் வேண்டும். மேலும் அதில் தார் சாலை அமைத்து அதனை புகைப்படம் எடுத்து இவ்வலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்தோடு தேவையான பாலங்கள், சாக்கடை வடிகால், துப்புரவு வசதி, தெரு விளக்கு ஆகிய வசதிகளை ஊராட்சி தலைவரின் கருத்திற்கேற்ப மனுதாரரால் அமைத்து தரப்படல் வேண்டும்.

.....2

செல் : 9380757855
எண். 3/41,செல்லியம்மன் நகர், பொன்மார் (P.O.) சென்னை - 600 127.

திருமதி. மகேஸ்வரி அருள்
தலைவர்

தேதி : 31-12-15

## தீர்மான நகல்
## சாதரணக்கூட்டம் 2015-2016

2015ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் தலைவர் தலைமையில் ஊராட்சி மன்றக் கட்டிடத்தில் சாதாரண கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் கீழ்கண்ட பொருட்கள் பரிசீலனைச் செய்த கூட்ட நடவடிக்கைகள்-

தலைமை : திருமதி.மகேஸ்வரி அருள் - தலைவர்
முன்னிலை : திருமதி. ராதிகா சரவணன் - உ.ப.தலைவர்
வருகை : மொத்தம் 9 உறுப்பினர்கள்.

| பொருள் - 66 / 2015 - 2016 | தீர்மானம் - 66 / 2015 - 2016 |
|---|---|
| காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், பொன்மார் ஊராட்சி, போலச்சேரி கிராமம் திரு. R.S. நாராயணன் என்பவருக்கு சொந்தமான சர்வே எண்கள் 55/1B2, 2B, 2C1, 2C2, 57/1, 2, 3, 4, 60/2A, 2B, 61/3 Pt-ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப் பிரிவு மவ/நஊஇ எண்.35/2012-ல் மனை எண்.417 பரப்பு 2.06 ஏக்கர் இடத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் கோரியது. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் Orange வண்ணமிட்ட 7 மீ மற்றும் 9 மீ அகலம் சாலைகள் அனைத்தும் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலக ந.க.எண்.2088/2015/செம3 நாள் 21.09.15ன் விவரப்படி மனைப்பிரிவு சாலைகள் எல்லை வரை சாலைகள் அமைக்கப்பட்ட உறுதி மொழியினை மனுதாரரிடம் பெற்றுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றுவது சம்மந்தமாக | காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், பொன்மார் ஊராட்சி, போலச்சேரி கிராமம் திரு. R.S. நாராயணன் என்பவருக்கு சொந்தமான சர்வே எண்கள் 55/1B2, 2B, 2C1, 2C2, 57/1, 2, 3, 4, 60/2A, 2B, 61/3 Pt ல் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப் பிரிவு மவ/நஊஇ எண்.35/2012-ல் மனை எண்.417 பரப்பு 2.06 ஏக்கர் இடத்தில் மனைப்பிரிவு ஒப்புதல் கோரியது. மேற்படி மனைப்பிரிவு வரைபடத்தில் Orange வண்ணமிட்ட 7 மீ மற்றும் 9 மீ அகலம் சாலைகள் அனைத்தும் உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைப்பு செய்ய நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலக ந.க.எண்.2088/2015/செம3 நாள் 21.09.15ன் விவரப்படி மனைப்பிரிவு சாலைகள் எல்லை வரை சாலைகள் அமைக்கப்பட்ட உறுதி மொழியினை மனுதாரரிடம் பெற்றுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது |